| வானிலை சார்ந்த வேளாண் ஆலோசனை அறிக்கை<br>இணைந்து வழங்குபவர்கள்<br>பிராந்திய வானிலை மையம் சென்னை - இந்திய வானிலைத் துறை<br>ம. சா. சுவாமிநாதன் ஆராய்ச்சி நிறுவனம் மற்றும்<br>ரெட்டியார்சத்திரம் விதை உற்பத்தியாளர்கள் சங்கம் | | | | | |
|---|---|---|---|---|---|
| மாவட்டம் : | தேனி | காலம் : | 10/05/2023 | முதல் | 14/05/2023 |
| அறிக்கை எண் : | 037/ 2023 | வெளியீட்டு நாள் : | | 09/05/2023 | |

## தேனி மாவட்டத்தின் கடந்த வார வானிலை

பெரும்பாலான பகுதிகளில் அதிகபட்ச வெப்பநிலை 30°-36° செல்சியஸ் ஆகவும், குறைந்தபட்ச வெப்பநிலை 24° - 26° செல்சியஸ் ஆகவும் பதிவானது. மேலும் மழை பெறப்பட்டது.

| கடந்தவார வானிலை (04.05.2023 முதல் 08.05.2023) | | | | | | அடுத்த ஐந்து நாட்களுக்கான வானிலை முன்னறிவிப்பு – 14-05-2023- 08.30 வரை | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|---|---|
| 04/05 | 05/05 | 06/05 | 07/05 | 08/05 | தேதி | நாள்-5 10/05 | நாள்-5 11/05 | நாள்-5 12/05 | நாள்-5 13/05 | நாள்-5 14/05 |
| 4.1 | 0.9 | 0.0 | 3.3 | 0.2 | மழை (மி.மீ) | 12 | 4 | 8 | 2 | 2 |
| 36 | 35 | 30 | 35 | 33 | அதிக பட்ச வெப்பநிலை (செல்) | 36 | 35 | 35 | 34 | 34 |
| 24 | 24 | 26 | 25 | 25 | குறைந்த பட்ச வெப்பநிலை (செல்) | 24 | 23 | 23 | 22 | 22 |
| 6 | 7 | 6 | 8 | 6 | மேக மூட்டம் (ஆக்டா) | 7 | 6 | 8 | 8 | 8 |
| 92 | 97 | 78 | 87 | 75 | அதிக மற்றும் குறைந்த பட்ச காற்றின் ஈரப்பதம் (சதவீதம்) | 80 | 70 | 70 | 70 | 70 |
| 74 | 72 | 74 | 74 | 76 | | 40 | 30 | 30 | 30 | 30 |
| 4 | 4 | 10 | 2 | 4 | காற்றின் வேகம் (கி.மீ/மணி ) | 4 | 6 | 6 | 6 | 12 |
| தென் கிழக்கு | தென் கிழக்கு | தென் மேற்கு | தென் மேற்கு | தென் மேற்கு | **காற்றின் திசை** | **தென்** மேற்கு | **தென்** மேற்கு | **தென்** மேற்கு | **தென்** மேற்கு | **தென்** மேற்கு |

## குறுஞ்செய்தி :

மாவட்டத்தின் ஒரு சில இடங்களில் மே 10, 12 தேதி மிதமான மழையும் மற்றும் 11, 13, 14ம் தேதிகளில் லேசான மழைக்கு வாய்ப்புள்ளது. அதிகபட்ச வெப்பநிலையானது 34°-36° செல்சியஸ் ஆகவும், குறைந்தபட்ச வெப்பநிலையானது 22°-24° செல்சியஸ் ஆகவும் பதிவாகலாம். வானம் மேகமூட்டத்துடன் காணப்படும். மணிக்கு 4 முதல் 12 கி.மீ வேகத்தில், தென்மேற்கு திசையிலிருந்து காற்று வீசக்கூடும்.

மாவட்டத்தின் ஒரு சிலஇ இடங்களில் மே 10 தேதி இடி மின்னலுடன் கூடிய கனமழை பெய்ய வாய்ப்பு. விவசாயிகள், வாழைக்கு முட்டு கொடுத்தல், பப்பாளி, கொய்யா, முருங்கை பயிர்களுக்கு மண் அணைத்தல், கரும்பு பயிருக்கு விட்டம் கட்டுதல் போன்ற பாதுகாப்பு நடவடிக்கைகளை மேற்கொள்ளவும். கொடி வகை பயிர்பந்தல்களில் துரு பிடித்து பழுதடைந்துள்ள கம்பிகள் மற்றும் தூண்களை கண்டறிந்து சரி செய்யவும். போதுமான முட்டுகளை கொடுக்கவும். விளைநிலங்களில் மழைநீர் தேங்கி பயிர்களை சேதப்படுத்தாத அளவில் தேவையான வடிகால் வசதிகளை ஏற்படுத்தி கொள்ளும்படியும், கால்நடைகளை மேய்ச்சலுக்கு வெளியில் அனுப்பாமலும், மின்கம்பம் மற்றும் மரங்களில் கட்டாமலும் பாதுகாப்பாக கொட்டகைகளில் கட்டி வைக்கும்படியும் கேட்டு கொள்ளப்படுகிறார்கள்

கடந்த சில நாட்களாக, ஒரு சில இடங்களில் கோடை மழை பெய்துள்ளது. அடுத்த சில நாட்களுக்கும் மழை எதிர்பார்க்கப்படுவதால், விவசாயிகள் தங்கள் நிலத்தில் கோடை உழவுப் பணியினை மேற்கொண்டு மழை நீர் வீணாகாமல் நிலத்தினுள் சேமிப்பதோடு, மண்ணில் மறைந்துள்ள பூச்சிகளின் முட்டைகள் மற்றும் கூட்டுப் புழுக்களை நிலத்தின் மேற்பரப்பிற்கு கொண்டு வந்து சூரிய ஒளியின் மூலம் அழிக்கலாம்.

**எதிர்பார்க்கப்படும் வானிலைக்கேற்ற வேளாண் ஆலோசனைகள்**

**முக்கிய பயிர்கள் : மிளகு , வாழை, கால்நடை.**

**மிளகு:**

- மிளகு பயிரில் வாடல் நோய் கட்டுப்படுத்த மிளகு கொடி ஒன்றிர்க்கு 10 கிராம் டிரைக்கோடெர்மா விரிடி, 10 கிராம் சூடோமோனஸ, மற்றும் 10 கிராம் பேசிலஸ் ஆகியவற்றை ஒரு லிட்டர் தண்ணீரில் கலந்து மிளகு கொடிகளின் வேர் பகுதியில் நன்கு நனையும் படி ஊற்ற வேண்டும்.

**வாழை:**

- வாழை சாகுபடி செய்யும் விவசாயிகள் வாழைப் பழத்தின் தரத்தை உயர்த்த, 2, 4-டி மருந்தை 25 பிபிஎம் (25 மிகி / லிட்டர்) என்ற அளவில் பூவன், மொந்தன், ரஸ்தாளி, கோ 1 ஆகிய வாழைகளில் தெளிக்கலாம்.

**கால்நடை:**

- ஆடு வளர்க்கும் விவசாயிகள் தங்களின் ஆடுகளுக்கு உருளை மற்றும் நாடாப் புழுக்களுக்கான குடற்புழு நீக்க மருந்தினை மே - ஜீன் மாதங்களில் அளிக்கலாம். ஆடுகளுக்கு குடற்புழு நீக்க மருந்துகளை அதிகாலை வேளையில் வெறும் வயிற்றில் கொடுக்க வேண்டும்.